## பெண்கள் முன்னேற்றத்துக்கு இந்தியாவிலேயே முன்னோடியான மாநிலம், நமது தமிழ்நாடுதான்!

# மகளிர் மேம்பாட்டுக்கான பொற்காலமாக- ‘திராவிட மாடல்’ ஆட்சி திகழ்கிறது!

## ‘தி இந்து’ குழுமத்தின் பெண்கள் மாநாட்டில் – காணொலியில் ஆற்றிய உரையில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!



**சென்னை, ஆக. 1 –**

**‘தி இந்து’ குழுமம் ஏற்பாடு செய்த பெண்கள் மாநாட்டிற்கு வாழ்த்துக் தெரிவித்து காணொலியில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “பெண்கள் முன்னேற்றத்துக்கு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலம் என்றால், அது நமது தமிழ்நாடுதான்” என்றும் – “மகளிர் மேம்பாட்டுக்கான பொற்காலமாக நமது திராவிட மாடல் ஆட்சி திகழ்கிறது!” என்றும் குறிப்பிட்டார்.**

இம்மாநாட்டில் முதல்வர் அவர்கள் காணொலியில் ஆற்றிய உரை வருமாறு:

’தி இந்து’ நடத்தும், தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டுக்கு முதலில் என்னுடைய வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்கள் முன்னேற்றத்துக்கு இந்தியாவிலேயே முன்னோடியான மாநிலம் என்றால் அது, நமது தமிழ்நாடுதான்!

சாதி – மத – சடங்குகள் பெயரால் அடக்கப்பட்ட பெண்கள், தங்களுடைய உரிமைகளுக்காகக் குரல் கொடுத்துப் போராடி முன்னேறிய வரலாறு, தமிழ்நாட்டுக்கும் திராவிட இயக்கத்துக்குமே உரியது!

இந்தியாவிலேயே முதன்முறையாகப் பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை வழங்கியது 1989இல் இருந்த தலைவர் கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசுதான். அது மட்டுமல்ல, உள்ளாட்சித் துறையை என்னிடம் ஒப்படைத்தபோதுதான் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக இலட்சக்கணக்கான பெண்களுக்குச் சுழல்நிதி வழங்கி மகளிர் தொழில் செய்வதில் தமிழ்நாடுதான் முதன்மை மாநிலம் என்ற நிலையை ஏற்படுத்தினேன்! இப்போது நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, பெண்களுக்குத்தான், எல்லாத் திட்டங்களிலும் முன்னுரிமை கொடுத்துள்ளேன்.

பெண்களைத் தற்சார்புள்ளவர்களாக மாற்றும் இலவச விடியல் பயணம், அவர்களின் குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தாய் வீட்டுச் சீராகப் பெண்களுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம். பெண்கள் உயர்கல்வி பயில எந்தத் தடையும் இருக்கக் கூடாது என மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் ‘புதுமைப்பெண்’ திட்டத்தைத் தொடங்கியிருக்கிறேன்.

‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’ மூலமாக, குழந்தைகளும் பெண்களும் பயனடைகிறார்கள். பணிக்காக நகரங்களுக்குப் போகும் பெண்கள் பாதுகாப்பாகத் தங்கத் ‘தோழி’ விடுதிகள். இன்னும் நிறைய திட்டங்கள் உள்ளன. நமது திட்டங்களை இந்தியாவில் இருக்கும் எல்லா மாநிலங்களும் பின்பற்றுகிறார்கள். இப்போது போடப்பட்ட ஒன்றிய அரசின் பட்ஜெட்டிலும் நமது திட்டங்கள் நிறைய இடம்பெற்றிருக்கின்றன. இப்படி, இந்தியாவிலேயே பெண்கள் முன்னேற்றத்துக்கான முன்னோடித் திட்டங்களை நாம் செயல்படுத்துவதால்தான், பெண்கள் அதிகம் வேலைக்குப் போகும் மாநிலமாகத் தமிழ்நாடு உயர்ந்திருக்கிறது.

பெண்கள் தலைமையேற்று நடத்தும் 4,400 ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. நாம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து, 23 ஆயிரத்து 431 பெண்களுக்குப் பயிற்சி கொடுத்து, அவர்களைத் தொழில்முனைவோர்களாக ஆக்கியுள்ளோம்.

13 ஆயிரத்து 473 பெண் தொழில் முனைவோர்களுக்கு 1,056 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டிருக்கிறது. 366 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி, மகளிர் மேம்பாட்டுக்கான பொற்காலமாக நமது திராவிட மாடல் ஆட்சி திகழ்கிறது! இப்படிப்பட்ட சூழலில் இந்த பெண்கள் மாநாட்டைப் பாரம்பரியமிக்க ‘தி இந்து’ குழுமம் ஏற்பாடு செய்துள்ளது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

**பெண்களின் வேலைவாய்ப்புகள்! தமிழ்நாடு முன்னணி!**

பெண்களின் முன்னேற்றம் மற்றும் அவர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது.

தலைமைத்துவம் - திறன் மேம்பாடு - தொழில் முனைவு - கல்வி - சமூக மாற்றம் எனப் பல்வேறு முக்கியத் தலைப்புகளில் இந்த மாநாட்டில் பேசப்படவுள்ள கருத்துகள், எல்லோருக்கும் பயனளிக்க வேண்டும்.

கொள்கை வகுத்து, திட்டங்களாகச் செயல்படுத்தக் கூடிய கருத்துகளை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளும். சமூகத்துக்குப் பயனுள்ள கருத்துகளைச் சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோன்ற மாநாடுகள் எதிர்காலத்திலும் தொடர்ந்து நடந்து, தமிழ்நாடு உலகுக்கே வழிகாட்ட வேண்டும்! அதற்கு அடையாளமாக, இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கும் ’தி இந்து’ குழுமம் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்கு மீண்டும் ஒருமுறை எனது நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்!

இவ்வாறு தமது உரையில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

---

### திராவிட இயக்கக் கொள்கை பரவ - தமிழ் மொழிப் பற்று தழைக்க

# இனமானப் பற்று ஏற்பட - ‘நன்னன் குடி’ விழா போன்ற விழாக்கள் நடைபெற வேண்டும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!



**சென்னை, ஆக. 1 –**

**‘நன்னன்குடி’ சார்பில் நேற்று முந்தினம் (30.7.2024) மாலை நடைபெற்ற நூல் வெளியீடு மற்றும் பரிசளிப்பு விழாவுக்கு வாழ்த்துத் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த செய்தியில், “திராவிட இயக்கக் கொள்கை பரவவும், தமிழ்மொழிப்பற்று தழைக்கவும், இனமான உணர்வு ஏற்படவும், ‘நன்னன் குடி’ நடத்தும் இதுபோன்ற விழாக்கள் நடைபெற வேண்டும்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வரின் இவ்வாழ்த்துச் செய்தியை, இவ்விழாவில் பங்கேற்ற அமைச்சர் சா.சி. சிவசங்கர் மேடையில் படித்தார்.

அதன் விபரம் வருமாறு:-

**‘நன்னன் குடி’ சார்பில் – நூல் வெளியீட்டுடன் கூடிய பரிசளிப்பு விழா நேற்று (30.7.2024–செவ்வாய்க்கிழமை) மாலை சென்னை–இராஜா அண்ணாமலைபுரம் –திருவாவடு துறை டி.என். இராஜரத்தினம் கலையரங்கில் நடைபெற்றது.**

**விழாவிற்கு, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமையேற்று நிறைவுரை யாற்றினார். போக்கு வரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் இவ்விழாவில் சிறப்பு விருந்தின ராகக் கலந்துகொண்டு, நூலை வெளியிட்டு – பரிசுகள் வழங்கி – வாழ்த்துரை வழங்கினார்.**

**திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் சிறப்புரை யாற்றினார்.**

**மேலும் பெருமக்கள் பலரும் வாழ்த்துரை வழங்கினார்கள்.**

**இவ்விழாவிற்கு வாழ்த்துத் தெரிவித்து – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தி அனுப்பியிருந்தார்கள்.**

**விழாவில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் படித்த– முதல்வரின் அவ்வாழ்த்துச் செய்தி வருமாறு:–**

**நம் நெஞ்சம் நிறைந்து இன்று வரை வாழ்ந்து கொண்டு இருக்கும் மானமிகு பேராசிரியர் நன்னன் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் ‘நன்னன் குடி’ சார்பில் நடைபெறும் பரிசளிப்பு விழா – நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன்.**

**திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் அவர்கள் தலைமையில் நடைபெறும் விழாவில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அவர்களும், திராவிட இயக்கத் தமிழர் பேரவைப் பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பிப்பதை அறிந்து மகிழ்கிறேன்.**

**மானமிகு பேராசிரியர் நன்னன் அவர்களின் நேரடிப் பார்வையில் எப்படி விழாக்கள் நடந்து வந்ததோ அதேபோல் இன்றும் அதே நேர்த்தியுடனும் கொள்கை முரசமாகவும் இந்த விழாக்களை நன்னன் அவர்களது வழித்தோன்றல்கள் நடத்தி வருவதுதான் நன்னன் அவர்களுக்குக் கிடைத்த பெருமையாகும்.**

**தன்னைப் போலவே தனது குடும்பத்தையும் கொள்கைக் குடும்பமாக வளர்த்தெடுத்துள்ளார் நன்னன் அவர்கள்.**

**திராவிட இயக்கக் கொள்கை பரவவும் – தமிழ்மொழிப் பற்று தழைக்கவும் –**

**இனமான உணர்வு ஏற்படவும் இதுபோன்ற விழாக்கள் நடைபெற வேண்டும். அதற்கு எடுத்துக்காட்டான விழாதான் நன்னன் குடி நடத்தும் இந்த விழாக்களாகும்.**

**ஓர் இயக்கம் செய்ய வேண்டியதைப் போலவே, ஒரு குடும்பமும் செய்துகாட்ட முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டான விழாக்கள்தான் ‘நன்னன் குடி’ நடத்தும் விழாக்கள்.**

**விருதுபெறும் பெருமக்களையும் – விருது வழங்கும் பெருமக்களையும் –**

**விழா நடத்தும் பெருமக்களையும் வாழ்த்துகிறேன்! வணங்குகிறேன்!**

**நன்றி!**

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### ஆர்.கிருஷ்ணகுமார் தலைமையில் சைதை மேற்கு பகுதி

# இளைஞர் அணி சார்பில் இல்லந்தோறும் புதிய இளைஞர் அணி உறுப்பினர் சேர்ப்புக் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி ஆலோசனை வழங்குகிறார்!

*சென்னை, ஆக. 1-*

*சைதை மேற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் - இல்லந்தோறும் புதிய இளைஞர் அணி உறுப்பினர் சேர்த்தல் குறித்து மாவட்ட துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் தலைமையில் இன்று ஆலோசனைக்கூட்டம் நடைபெற உள்ளது*

*பகுதி செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி., ஆலோசனை வழங்குகிறார்.*

*வரும் காலத்திலும் கழகம் வலிவோடும் - பொலிவோடும் திகழ்ந்திட வேண்டும் என்பதற்காக, “இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை“ என்ற உன்னத திட்டத்தை அறிவித்து, புதிய உறுப்பினர்களை கழக இளைஞர் அணியில் சேர்த்திட வேண்டும் என்று இளைஞர்களின் இதயம் கவர்ந்த இளம் தலைவர் கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பிற்கிணங்க சைதை மேற்கு பகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் தலைமையிலும்,*

*வட்டகழக செயலாளர்கள் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., சை.மு.சேகர், எஸ்.பி.கோதண்டம், ந.தமிழரசு, எம்.நாகா, அட்கோக மலநாதன், பகுதி துணை அமைப்பாளர்கள் ஜிம்க. பிரபு, ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா, இரா.வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில்*

*சைதாப்பேட்டை பஜார் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் இன்று (01.08.2024 - வியாழக்கிழமை) மாலை 6.00 மணியளவில் சைதை மேற்கு பகுதிக்குட்பட்ட ஆறு வட்டங்களிலும் இல்லந்தோறும் இளைஞர் அணி புதிய உறுப்பினர்கள் சேர்த்திடும் பணியும், சமூக வலைதள பயிற்சியும் குறித்து ஆலோசனைக்கூட்டம் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டத்திற்கு சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டல குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி இளைஞர் அணி சார்பில் பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்து ஆலோசனைகளை வழங்க உள்ளார்.*

*எனவே இக்கூட்டத்திற்கு இளைஞர் அணியை சார்ந்த பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள், வட்ட துணைஅமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் குறிப்பிட்ட நேரத்தில் கலந்து கொண்டு சிறப்பித்து தருமாறு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*



விருதுநகர் மாவட்டம் மல்லாங்கிணற்றில் முன்னாள் அமைச்சர் மற்றும் தி.மு.க. மாவட்டச் செயலாளர் வே.தங்கப்பாண்டியன் 27 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன், இராமநாதபுரம மாவட்டச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி ,தேனி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன், ராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தங்கபாண்டியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகவேல், விவசாய அணி மாநில துணைச் செயலாளர் திருமங்கலம் முத்துராமலிங்கம், சிவகாசி மாநகர செயலாளர் உதய சூரியன், மதுரை அக்ரி கணேசன், விளையாட்டு அணி கே.ஜி.ராஜகுரு, மல்லாங்கிணறு போஸ், இளைஞர் அணி கிருஷ்ணகுமார், நேர்முக உதவியாளர் பாலகுரு, பொதுக்குழு உறுப்பினர் ஆர்.பி.மதியழகன், விருதுநகர் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, தி.மு.க. கிளைச் செயலாளர்கள், தி.மு.க. பல்வேறு அணியைச் சேர்ந்த அணிச் செயலாளர்கள் ஆகியோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.

---

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## நாஞ்சில் கி. மனோகரன்

### ஆகஸ்ட் 1 (2000)



**பெரியாரின் பெருந்தொண்டராய், பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பியாய், தலைவர் கலைஞர் அவர்களின் ஆருயிர் இளவலாய் திகழ்ந்தவர்.**

**நாடாளுமன்ற உறுப்பினராக மூன்று முறையும், சட்டப்பேரவை உறுப்பினராக நான்கு முறையும் தேர்ந்தெடுக்கப் பட்டவர். தமிழக அரசின் வருவாய்த் துறை அமைச்சராகவும், கழகத் துணைப் பொதுச்செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**இளம்வயதிலேயே கழகச் சார்பில் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர். அகில இந்தியத் தலைவர்கள் பலருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்றவர்.**

**கழக உடன்பிறப்புக்களிடம் பாசத்தை பொழியும் பழக்கமுள்ளவர். பழகுவதற்கு இனிய பண்பாளர். தமிழிலும், ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசக்கூடிய பேச்சாற்றலாலும், வாதத்திறமையாலும் ‘நாவுக்கரசர்’ என அழைக்கப்பட்டவர்.**

**கழகத்தின் சார்பில் 1987ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும்விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் அண்ணா விருது வழங்கி சிறப்பித்தார்.**

**“என் கண்ணீரைக் காண்பதற்கு உனக்கும் ஓர் ஆசை – அதை நிறைவேற்றிக் கொண்டாய் – என் இதயத்தில் என்றென்றும் வீற்றிருப்பாய்!” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**